



# ¼ இன்ச் சீம் ஃபுட்

## இந்த பாடத்திலே உஷா ஜெனோம் 1/4 இன்ச் சீம் ஃபுட்-ஐ, யூஸ் பண்றது பத்தி தெரிஞ்சுக்கலாம்..




சீரான தையல்,நல்ல தையல்காரர்களுக்கு அடையாளம்.அது, எந்த ப்ராஜக்ட்-க்கும், ஸ்மூத் ஃபினிஷ் கொடுக்குது.கண்ணுக்கு இனிமையா இருக்கு. பேட்ச் வொர்க் -ஐ, விரும்பறவங்களுக்கு, சீரான தையல், ரொம்ப முக்கியம்.

இந்த பாடத்திலே உஷா ஜெனோம் 1/4th இன்ச் சீம் ஃபுட்-ஐ, யூஸ் பண்றது பத்தி தெரிஞ்சுக்குவீங்க.இந்த, ஃபுட் , சீரான கால் அங்குல சீம்-ஐ தைக்கறதுக்கு, உதவியா இருக்கும்.குறிப்பா, பேட்ச் வொர்க் பண்றவங்களுக்கு இது , ரொம்ப பயனுள்ளதா, இருக்கு. தையல் ஒழுங்கா இல்லாததனாலே வரக்கூடிய ஸ்ட்ரெஸ்-ஐ அது போக்கிடுது.

இந்த பாடத்துக்கு,உங்களுக்கு தேவையானது, உஷா ஜெனோம் 1/4 சீம் ஃபுட், சதுரமான ஒரு துணி, 8-க்கு 8- அங்குல அளவாவது இருக்கணும், நூல், அப்புறம், கத்தரிக்கோல்.

எது இந்த ¼ இன்ச் சீம் ஃபுட்-ஐ, ஸ்பெஷலா ஆக்குதுன்னா,இங்கே இருக்கிற கைடிங் ப்ளேட் தான்.அது, க்வாட்டர் இன்ச் சீம் -ஐ தைக்கறதை, என்ஷ்யூர் பண்ணுது.அந்தப்பக்கத்திலே இருக்கிற இந்த ரெண்டு லைன்ஸ்-ம், பிவட்டிங் பண்ணும் போது உதவியா இருக்கும்.

இனி, ஆரம்பிக்கலாம். நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட் -ஐ எடுத்துட்டு 1/4th இன்ச் சீம் ஃபுட் -ஐ அது மேலே பொருத்தலாம்..

துணியை, ஃபுட்-க்கு கீழே வெச்சு, துணியோட விளிம்பு , கைடிங் ப்ளேட் - ஓட, அலைண்ட்--ஆ, இருக்கற மாதிரி பார்த்துக்கணும். ஃபுட் -ஐ, கீழே இறக்குங்க. இப்போ உங்க மெஷினை செட் பண்ணுங்க. பேட்டர்ன் செலக்டர் -லே A-வையும், ஸ்டிச்











லெந்த்-லே, 2-க்கும் 3-க்கும் நடுவிலேயும், செட் பண்ணுங்க.
ஸ்ட்ரெயிட் லைன் -ஐ ஒட்டி தைக்க ஆரம்பியுங்க. ஃபுட்- னுடைய பிவட்டிங், கைடு பண்ற லோயர் லைன் ,துணியினுடைய விளிம்போட அலைண்ட்- ஆ, இருக்கணும்..இந்த மாதிரி.

பர்பெக்ட் கார்னர் கிடைக்கறதுக்கு, என்னுடைய அடுத்த ஸ்டெப்ஸ்-ஐ கவனமா ஃபாலோ பண்ணுங்க. ஊசியைக்கீழே இறக்கறதுக்கு, ஃப்ளை வீல்-ஐ உங்க பக்கமா திருப்புங்க.துணியை 90- டிகிரி கோணத்திலே திருப்புங்க.நீங்க போட்ட தையல் ஃபுட்-னுடைய அப்பர் மார்க்கிங்-க்கு, மேட்ச்-ஆ இருக்கான்னு, உறுதி படுத்திக்கங்க. அதே மாதிரி, ப்ளேக் கைடிங் ப்ளேட் ,, துணியோட விளிம்போட அலைன் ஆகியிருக்கா-ன்னும் பார்த்துக்கணும். -- இந்த மாதிரி.
மறுபடியும் தைக்க ஆரம்பியுங்க. கடைசி மூலை வரைக்கும், மூலைகள்-லே முன்னே செய்த அதே முறையை ஃபாலோ பண்ணுங்க.

எல்லா பக்கங்களையும் தைச்சு முடிச்ச பிறகு, நூலை கட் பண்ணிட்டு, துணியை ,அதிலே இருந்து, எடுத்திடுங்க. உட்கார்ந்து,சீரான தையல் வந்திருக்கறதைப்பார்த்து சந்தோஷப்படுங்க.

இதோ, சில உதாரணங்களைப் பார்க்கலாம், இந்த ஃபுட்-ஐ, பயன்படுத்தி, இதையெல்லாம் செய்யலாம்,உங்க டிசைன்-லே, நீட் சீம்ஸ்-ஐ, கிரியேட் பண்ணுங்க.அற்புதமான பேட்ச் வொர்க் செய்யுங்க. க்வில்டிங் ப்ராஜக்ட்ஸ் -க்கு, ப்ரொபஷனல் ஃபினிஷ்- கிடைக்கறதுக்கு இது ஒரு நல்ல வழி. 1/4th சீம் ஃபுட், ப்ராடக்ட் -க்கு, நீட்நெஸ் -ம், ப்ரொபஷனல் ஃபினிஷ் -ம், கொடுக்கறதுக்கு, சுலபமான வழி. இதை உங்க விருப்பப்படி, சிம்பிள்-ஆ செய்யலாம், வித்தியாசமாவும் செய்யலாம்.எண்ட் ரிசல்ட் எப்பவுமே நல்லா இருக்கும்.பிரமாதமா இருக்கு, இல்லை ?